# 22-01-2025 செய்தி

## வறுமையிலிருந்து மீள்கிறதா இந்தியா?

- உலகளவில் 70 கோடி பேர் வறுமைக்கோட்டுக்குக் கீழ் இருப்பதாக உலக வங்கியின் அறிக்கை தெரிவிக்கிறது. இந்தியாவில் 9 வருடங்களில் 25 கோடி பேர் வறுமையிலிருந்து மீண்டுள்ளதாக நிதி ஆயோக் அறிக்கை தெரிவித்துள்ள நிலையில், வரலாற்றில் முதல் முறையாக 2024 இல் நாட்டின் வறுமை விகிதம் 5%க்கும் கீழே சென்றுள்ளதாக பாரத் ஸ்டேட் வங்கியின் ஆய்வும் சுட்டிக்காட்டியிருக்கிறது.
- பட்டினி ஒழிப்பு, வறுமையின்மை, ஆரோக்கியம், கல்வி, பாலினச் சமத்துவம் உள்ளிட்ட பல்வேறு இலக்குகளை ஒரு நாட்டின் நிலைத்த வளர்ச்சிக்கான பாதையாக ஐக்கிய நாடுகள் அவை நிர்ணயித்திருக்கிறது.

**மாநிலங்கள் நிலவரம்**

- சுகாதாரம், நிதி சேவை, குடிநீர், மின்சாரம், ஊட்டச்சத்து, சமையல் எரிவாயு போன்றவை மக்களுக்கு முழுமையாகச் சென்றடைவதில் மத்திய மாநில அரசுகள் எவ்வாறு செயல்படுகின்றன என்பதைப் பொறுத்து நாட்டின் வறுமை விகிதம் கணக்கிடப்படுகிறது.
- அந்த வகையில் 2023இல், இந்தியாவின் மாநிலங்கள், மத்திய ஆட்சிப் பகுதிகள், பல்பரிமாண வறுமைக் குறியீடு (Multidimensional Poverty Index – ஒரு குடும்பம், தனிநபரின் வருமானத்தை அடிப்படையாகக் கொண்டு கணக்கிடப்படுவது) மதிப்பீட்டின்படி, உத்தரப் பிரதேசம், பீகார், மத்தியப் பிரதேசம், ஒடிஷா, ராஜஸ்தான் போன்ற மாநிலங்களில் வறுமை விகிதம் குறிப்பிடத்தக்க அளவில் குறைந்துள்ளது.

**கிராமங்கள், நகரங்கள்**

- இந்தியக் கிராமங்களில் வறுமை விகிதம் 2023இல் 7.2% இலிருந்து 2024 இல் 4.8% ஆகக் குறைந்துள்ளது. நகர்ப்புறங்களில் இந்த எண்ணிக்கை 2023 இல் 4.6% இலிருந்து 2024 இல் 4.09% ஆகக் குறைந்திருக்கிறது.
- 2012 உடன் ஒப்பிடுகையில் கிராமம், நகரங்களில் வறுமை நிலை குறைந்துள்ளதாகவும் வரும் ஆண்டுகளில் இந்த எண்ணிக்கை மேலும் குறையும் எனவும் பாரத் ஸ்டேட் வங்கி சுட்டிக் காட்டியுள்ளது.
- 2023-24 ஆம் ஆண்டில் கிராமப்புற – நகர்ப்புற நுகர்வு கணிசமாக அதிகரித்துள்ளது. 2024 ஆம் நிதியாண்டில், நுகர்வு விகிதம் நகரத்தில் 8 சதவீதமும், கிராமத்தில் 9 சதவீதமும் அதிகரித்துள்ளதாக மாதாந்திர வீட்டு நுகர்வு சார்ந்த தரவுகள் தெரிவிக்கின்றன.
- பாரத் ஸ்டேட் வங்கி ஆய்வில், 2023-24 ஆம் ஆண்டில் மாதாந்திர தனிநபர் நுகர்வுச் செலவு (MPCE - monthly per capita consumption expenditure) கிராமப்புறங்களுக்கு ரூ.4,122 ஆகவும், நகர்ப்புறங்களுக்கு ரூ.6,996 ஆகவும் உள்ளது. அதே நேரத்தில் தினசரிச் செலவு கிராமம், நகரங்களில் முறையே ரூ.137, ரூ.233 ஆக உள்ளது.

**தமிழகத்தில்....**

- 2023-24 ஆம் நிதி ஆண்டுக்கான 'நிலையான வளர்ச்சி இலக்குகள்' குறியீட்டின்படி, உயர்நிலைப் பள்ளி மாணவர் சேர்க்கை தேசிய சராசரி 57.6% ஆக உள்ள நிலையில், தமிழ்நாட்டில் அது 81.5% ஆக உள்ளது.
- அதேபோல், கல்லூரிச் சேர்க்கையில் தேசிய சராசரி 28.4% ஆக உள்ள நிலையில், தமிழ்நாட்டில் அது 47% ஆக உள்ளது. தமிழ் நாட்டின் கிராமப்புறங்களில் 81.87% குடும்பங்கள் சுத்தமான குடிநீர் வசதியைப் பெற்றுள்ளன. 92.8% குடும்பங்களில் ஒருவரிடமாவது அலைபேசி உள்ளது. தமிழகத்தில் வேலையின்மை விகிதம் 4.3% ஆக இருக்கிறது.

**ஆய்வுகள் என்ன கூறுகின்றன?**

- மக்களுக்கும் வறுமைக்கும் இடையேயான இடைவெளி ஒரே நேர்க்கோட்டில் பயணித்துவருவதாக இந்த ஆய்வு முடிவு கூறுகிறது.
- 20 ஆண்டுகளாக இந்தியப் பொருளாதாரம் வளர்ந்துள்ளது. ஆனால், நீண்டகால வறுமையில் தவிக்கும் மக்கள் வறுமையில் இருந்து நிரந்தரமாக விடுபடுவதற்கு மாறாக இயற்கைப் பேரழிவு, நோய்த் தாக்கம், நிலையற்ற பொருளாதார நிலை ஆகியவற்றைப் பொறுத்தே வறுமையிலிருந்து வெளியேறுகிறார்கள்.
- 2011-12, 2022-24 இல் நடத்தப்பட்ட 'இந்திய மனித மேம்பாட்டுக் கணக்கெடுப்புத்' தரவுகளின்மூலம், சுமார் 18.1% மக்கள் வறுமையிலிருந்து மீண்டுள்ளனர். எனினும் 5.3% பேர் புதிதாக வறுமை நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளதாகத் தெரியவந்துள்ளது.
- பொருளாதாரரீதியாக நாடு முன்னேற்றம் அடைந்தாலும், மக்கள் ஏதோ ஒருவகையில் வறுமை நிலைக்குத் தள்ளப்படுகின்றனர் என்பதை இத்தரவுகள் உணர்த்தியுள்ளன. மேலும், நாள்பட்ட வறுமை நிலையைவிட, வருமானம் – செலவு சார்ந்து ஏற்படும் வறுமையே மக்களிடம் ஆதிக்கம் செலுத்துவதாகப் பொருளாதார ஆய்வுகள் குறிப்பிடுகின்றன.

**நீண்ட பயணம்**

- நவம்பர், 2024 வரையில் இந்தியாவின் பணவீக்க விகிதம் 5.48% ஆக இருந்தது. தொடர்ந்து நீடிக்கும் பணவீக்கத்தினால் மக்களின் அன்றாடச் செலவும் அதிகரித்துள்ளது.
- 2021-2022 ஆம் நிதியாண்டில் 19 கோடித் தொழிலாளர்கள் ஒரு நாளைக்கு 100 ரூபாய் மட்டுமே சம்பளமாகப் பெற்ற நிலையில், வறுமைக்கோட்டின் கீழ்தான் இத்தொழிலாளர்கள் வருகிறார்கள். 2012 முதல் நுகர்வு – செலவினங்கள் குறித்த கணக்கெடுப்பை மத்திய அரசு வழங்காத நிலையில், வறுமை விகிதம் குறைந்துள்ளதாகக் கூறுவதை எப்படி ஏற்றுகொள்ள முடியும் எனச் சமூக ஆர்வலர்கள் கேள்வி எழுப்பியுள்ளனர்.
- வறுமையை ஒழிக்க மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலைவாய்ப்பு உறுதித் திட்டம், திறன் இந்தியா, கரீப் கல்யாண் அன்ன யோஜனா, தேசிய சமூகப் பாதுகாப்புத் திட்டம், தெருவோர வியாபாரிகளுக்கான பிரதம மந்திரியின் திட்டம் போன்றவை மத்திய அரசால் உருவாக்கப்பட்டுள்ளன.
- எனினும் இத்திட்டங்கள் முறையாகச் செயல்படுத்தப்படுவதில் சில இடர்ப்பாடுகள் நீடிக்கின்றன. அந்த வகையில், வறுமையை நீக்குவதில் இந்தியா இன்னமும் நீண்ட தூரம் பயணிக்க வேண்டியுள்ளது.

SURESH